# விழிநீர் விசும்பல்

**தோற்றம்**

**08**

**11**

**1947**



**மறைவு**

**24**

**09**

**2019**

**பத்மாவதியின் பத்மவியூகநற்பணிகளை மறக்கமுடியுமா?**
**மறுக்கத்தான் முடியுமா?**

**தில்லைக்கூத்தன்** திருவருளால் **வேலுப்பிள்ளை பூரணம்**
தம்பதிகளுக்கு அன்பில் உதித்த முத்தான மூத்தபுதல்வியல்லவா!
நுண்ணறிவிலும் துணிவிலும் ஆண்மகனுக்கு நிகரான
அஞ்சாநெஞ்சுரம் கொண்ட பத்மசொரூபம் அல்லவா!

**பத்மாவதி** என்னும் நாமம் தன்னையும் அவரின்
**முன்பள்ளிக்குழந்தைகளுக்கான** சேவைகளையும்
வேதரடைப்பு அல்லின் வீதியில் அறியார் யார் உளர்!.

அமைதியின் சொரூபமும் ஆண்மபலமும் கொண்ட
பேரறிவாளன் **பேரம்பலம்** கரம் தன்னைப்பற்றி குழந்தைகளான
**சியாமளா ,பிறேமளா ,முரளி ,அனுசா** ஆகியோரின் தாயல்லவா!

**80**களில் **வேதரடைப்பு கிராமமுன்னேற்றச்சங்கம்**
**சோலையான் விளையாட்டுக்கழகம்** போன்ற
அரிய செயற்திட்டங்கள் உங்கள் அனுமதியுடன் உங்கள் மணையில்
உருவகம்பெற்றதை யாராலும் மறக்கமுடியுமா?

முதலாவது சோலையான் விளையாட்டுக்கழக விளையாட்டுபொருட்களுக்கான
முழுநிதியுதவிகளையும் தந்துதவியர்கள் அல்லவா?.

நீங்கள் **வேதரடைப்பு கிராமமுன்னேற்றசங்கத்திற்கான நிலத்தை**
தங்கள் தந்தையிடம் பெற்றுத்தந்த **நன்றிதனை** மறக்கமுடியுமா?

இவ்வாறு பல உதவிகள் புரிந்த தங்களின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல **ஈழத்துதில்லைக்கூத்தனை** வேண்டிநிற்கின்றோம்.

உங்கள் பிள்ளைகளுக்கும் உறவுகளுக்கும் எவ்வாறு ஆறுதல் கூறுவதுஎன்று தெரியாது தவிர்க்கின்றோம்.இறுதி மூச்சுவரை
ஊர்ப்பணிகளை உவகையுடன் மேற்கொண்ட
உங்கள் ஆத்மா சாந்தியடை இறைஞ்சுகின்றோம்.

**ஓம் சாந்தி !**
**ஓம்ச சாந்தி ! சாந்தி !!**
**ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!**

L'ASSOCIATION CARITATIVE KARAI - FRANCE
காரை நலன் புரிச்சங்கம்
காரை நலன்புரிச் சங்கம்
பிரான்ஸ்

**உங்கள் பணியியை வணங்கிடும்**
**பிரான்ஸ் வாழ்காரைநலன்புரிச்சங்க**
**உறுப்பினர்களும் காரைமக்களும்**